## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of Judicial Magistrate No.II, Virudhunagar**

| | | |
|---|---|---|
| **Calendar Miscellaneous Special case** | **:** | **CC.No. 599/2022** |
| **Deposition of witness for** | **:** | **Prosecution PW 3** |
| **Name** | **:** | **ராமர்** |
| **Father's/Husband's name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of**

**04.07.2026**

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பெரிய வள்ளிக்குளத்தில் குடியிருந்து சமையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா.1 ஐத் தெரியும். கடந்த 09.11.2021 ம் தேதி இரவு 09.45 மணியளவில் நானும், பாண்டியும் சம்பளம் வாங்குவதற்காக போஸ் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் சென்றபோது, எதிரியும், போஸ் மனைவி சரளாதேவியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். எதிரி, போஸின் மனைவி சரளாதேவியை பார்த்து அசிங்க அசிங்கமாக பேசி, கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார். அப்போது வீட்டில் இருந்து வெளியே வந்த போஸ் எங்களைப் பார்த்து நாளைக்கு வாங்கள் என்று கூறினார். நாங்கள் அங்கிருந்து சென்று விட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று, சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 போஸிடம் நான் வேலை செய்வதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயத்தின்போது சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

P IYAPPAN

Digitally signed by P IYAPPAN